[24th March 1965

திருமதி சி. குழந்தையம்மாள் : கொடுக்கிற மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள் குறைவாக இருப்பதினுல், இப்பொழுது இருக்கின்ற அளவை அதிகப்படுத்தவேண்டுமென்று பலமுறை வற்புறுத்திச் சொல்லப்பட்டது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? நிதி ஒதுக்கீட்டிலே மோட்டார் சைக்கிள் களுக்கும் ஸ்கூட்டர்களுக்கும் அதிகமாக பணம் ஒதுக்கிக்கொடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்பொழுது கொடுத்துவருகின்ற தொகை மூலம் 110 சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும், 9 ரிசர்வ் இன்ஸ்பெக்டர்களுக்கும், சென்னையில் 16 சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் கொடுப்பதுபோல் மற்ற போலீஸ்காரர்களுக்கு சைக்கிள்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. சா. கணேசன் : போலீஸ் அதிகாரிகளில் குறிப்பிட்ட சிலருக்கு மோட்டார் பைக் அளிப்பதை சர்க்கார் உணர்ந்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதைவிட முக்கியமாக எல்லா போலீஸ் ஸ்டேஷன் களிலும் டெலிபோன் வசதிகள் நிச்சயம் இருக்கவேண்டும் என்பதை ஏற்று சீக்கிரம் போலீஸ் ஸ்டேஷன்கள் முழுவதிலும் அதை நிறைவேற்று வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அதைப்பற்றியும் அரசாங்கம் பரிசீலனை செய்கிறது.

திரு. அ. ராகவ ரெட்டி : குறைந்தது ஒவ்வொரு சர்கிளுக்கும் ஒரு ஜீப் கொடுக்கவேண்டும். அதை கூடிய சீக்கிரத்தில் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எல்லா இன்ஸ்பெக்டர்களுக்கும், சப்-இன்ஸ் பெக்டர்களுக்கும் வாகன வசதி கொடுப்பதற்கு இப்போது 71 லட்ச ரூபாய் ஆகிறது. மேலும் கொடுக்கவேண்டுமென்ருல் அதிகமான பணம் செல வழிக்கவேண்டும். ஆகவே, எந்த அளவிற்கு அதிகமாகக் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குக் கொடுப்பதற்கு முயற்சி செய்துவருகிறோம்.

திருமதி சி. குழந்தையம்மாள் : இந்த போலீஸ் இலாகாவிற்குப் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருப்பதால், ரெவின்யூ டிபார்ட் மென்டில் இருப்பதுபோல் வேன் ஒன்றிரண்டுதான் இருப்பதால், ஒரு பெரிய வேன் ஒரு கூட்டத்திற்கு புறப்பட்டால், மற்றவர்கள் போவதற்கு முடிவதில்லை. ஒவ்வொரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆபீஸிலும், ஒரு மோட்டார் பைக், ஸ்கூட்டர், ஜீப் போன்றவைகளை வட்டார அளவில் வைக்க சர்க்கார் ஆலோசனை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்ல முடியும்.

Police Housing Scheme

* 318 *Q.*—Sri K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of houses constructed during 1964 under the Police Housing Scheme in the State; and

(*b*) the amount spent for the above scheme in 1964?

24th March 1965]

THE HON. SRI P. KAKKAN : (*a*) 202.

(*b*) Rs. 25·65 lakhs (excluding the amount spent in the last quarter of 1964).

(அ) 202.

(இ) ரூ. 25·65 லட்சம். (1964-ம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் செலவழித்த தொகை இதில் அடங்காது).

திரு. கே. ஏ. மதியழகன் : போலீஸ் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் மொத்தம் இந்த மாநிலத்தில் 30,000-க்கு மேற்பட்ட போலீஸ்காரர்கள் இருக்கிறார்களே, அவர்களில் எத்தனை பேர் இந்த திட்டத்தினால் பலன் பெற்று இருக்கிறார்கள் ? மொத்தம் கட்டப்பட்டுள்ள வீடுகள் எவ்வளவு ?

கனம் திரு. பூ. கக்கன் : 1964 செப்டம்பர் 30-ம் தேதி வரை, 6,339 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இதற்கு ஆன செலவு ரூ. 462 லட்சத்து சொச்சம்.

திரு. சா. கணேசன் : போலீஸ்காரர்களுக்கு மற்ற வசதிகளைவிட குடியிருப்பு வசதி மிக இன்றியமையாதது. அடிக்கடி அவர்கள் மாற்றப் படுவதால், பல இடங்களில் இடமில்லாமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் நிதானமாகவும், நேர்மையாகவும் நடப்பதற்கு ஊறு விளைவிக்காத சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும் என்றால் எங்கும் அவர்கள் குடியிருக்காமல் போலீஸ் வீடுகளில் குடியிருக்க வேண்டும் என்பதை உணர்ந்து, அதிகமான வீடுகளை அதிகமான ஆபீசர்களுக்கும், அதிகமான போலீஸ்காரர்களுக்கும் கட்டிக்கொடுக்கும்படி உடனடியாக ஏற்பாடு செய்யச் சர்க்கார் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது அவசியம் என்று கருதித்தான் மத்திய அரசாங்கம் கடனாக கொடுத்து உதவிசெய்து வருகிறது. வீடு கட்டிக்கொண்டே வருகிறோம். நூற்றுக்கு 80 அளவுக்கு வீட்டு வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு எடுத்து இருக்கிறது. காலப் போக்கில் எல்லோருக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

திரு. வை. சங்கரன் : கீழ் நிலையில் உள்ள போலீஸ்காரர்கள் எல்லா ருக்கும் வீடு கட்டித் தருவது என்பது அரசாங்கத்தின் கொள்கையா ? அப்படி என்றால் எத்தனை காலத்திற்குள் இது முடிவு அடையும் ?

கனம் திரு. பூ. கக்கன் : திட்டமிட்டு வேலை செய்கிறோம். வருங் காலத்தில் எல்லோருக்கும் வீடு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : 1964-ம் வருஷக் கடைசியில் சர்க்கார் கணக்குப்படி இன்னும் எத்தனை பேருக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டு மென்று கணக்கு இருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

சேலத்தில் உணவு உற்பத்திக் கோட்ட அலுவலகம்

*** 319 கேள்வி—திரு. ம. கமலநாதன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உணவு உற்பத்தி கோட்ட அலுவலகம் (Food Production Division Office) எப்போது துவக்கப்பட்டது ?

(இ) எப்போது மூடப்பட்டது ? காரணம் என்ன ?